# வள்ளுவர் காட்டும் குடும்பம்



செந்தமிழ் அந்தணர்

இரா.இளங்குமரனார்

"வாலறிவன்" குறள் நெறிக்கழக வெளியீடு

# வள்ளுவர் காட்டும்
# குடும்பம்

செந்தமிழ் அந்தணர்

**இரா. இளங்குமரனார்**

**செங்கதிர் பதிப்பகம்**

வாலறிவன் - குறள் நெறிக்கழகம்

நெய்வேலி-607 801.

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **வள்ளுவர் காட்டும் குடும்பம்** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரனார்** |
| முதற்பதிப்பு | 2014 |
| தாள் | 11.6 மேப்லித்தோ |
| அளவு | 1/16 கிரௌன் |
| பக்கம் | 10 + 38 = 48 |
| படிகள் | 2000 |
| முகப்போவியம் அட்டை வடிவமைப்பு : | ஓவியர் இராம்பாபு |
| அச்சு | ஸ்ரீராம் பிரிண்டர்ஸ்<br>நெ. 7, கடலூர் மெயின் ரோடு,<br>நெய்வேலி-2. இன்சொல் : 9443426524 |
| கட்டமைப்பு | இயல்பு |
| விலை | உருவா 30 |
| வெளியீடு | செங்கதிர் பதிப்பகம்<br>வாலறிவன் குறள்நெறிக்கழகம்<br>17, என்.ஆர். இராசன் நகர்,<br>இந்திரா நகர், நெய்வேலி-607 801.<br>இன்சொல் : 9500424633 |
| நூல்கள் பெற : | • திருவள்ளுவர் தவச்சாலை<br>திருவளர்குடி (அல்லூர்) &<br>• வாலறிவன் குறள்நெறிக்கழகம்<br>இந்திரா நகர், நெய்வேலி-607 801. |

மந்தாரக்குப்பம் "என்.எல்.சி" இருபாலர்
மேனிலைப்பள்ளி "வாலறிவன்" சுவரோவியம்



கலையுணர்வுடன்...
ஓவியர் இராம்பாபு

பொன்மொழி-2013

திருக்குறளே வாழ்வின் மூச்சு;-அதுவே
தினந்தோறும் என் பேச்சு!

- அ.கலைவாணி

## திருக்குறளே தமிழின்கோட்டை

கடைக்காலாய்...
அறம்!- அதிலெழுந்த
கட்டடமே...
பொருள்!- மேலுயர்ந்த
கோபுரந்தான்...
இன்பம்!
ஆம்-
இவையனைத்தும்...
இணைந்த எழிலுருவாம்
திருக்குறளே தமிழின்கோட்டை!

-மேத்தாவாணன்

---

## பொன்மொழி-2013

திருக்குறள் படிநீ தினம்;- மிகத்
தெளிவாய் இருக்கும் மனம்!

- க.தனம்

## இன்பச் சுரப்பு

நெய்வேலிப் பேரன்பர் தாமோதரனார் தொடர்பு, வள்ளுவர்க்கு **'வாலறிவன்'** என்று வழங்கிய இறைமைப் பெயரைச் சூட்டி, வாலறிவன் குறள் நெறிக்கழகம் உருவாக்கி உயர்பணியாற்றும் மேத்தாவாணர் பேரன்பை எனக்கு உண்டாக்கியது.

தனிமாந்தர்க்குச் சொல்லும் வாலறிவன் மொழியினும், வாலறிவன் குடும்பங்களை உருவாக்கி உணர்த்துதல் பெரும்பயன் எனப்பட்டறிவால் கண்டு, வாலறிவன் குடும்ப அமைப்பை நான்காம் ஆண்டில் உருவாக்கிப் பெருக்கினார். அதன் நான்காம் ஆண்டு விழாவுக்கு யான் வழக்கம்போல் சென்று பங்கேற்கும் பேறுற்றேன். அந்நிகழ்வுப் பயனை மேத்தாவாணரே எழுதுகிறார்.

"தாங்கள் 30-11-2013 அன்று நெய்வேலி புதுநகரில் நிகழ்த்திய **'வள்ளுவர் காட்டும் குடும்பம்' என்னும் பொழிவும் 'புறங்கூறாமை'** அமர்வுத்தொகுப்பும் சுவைத்தோர் நெஞ்சத்தில் நிறைநேயத்தையும், மனத்தில் பயன்தரு மாற்றத்தையும் உருவாக்கியுள்ளது. ஆதலால், அதன் தொலைநோக்குத் தொடர்பயன் கருதித் தாங்கள் உரைநிகழ்த்திய, "**வள்ளுவர் காட்டும் குடும்பம்**" என்னும் தலைப்பைத் தங்களின் முழு விழைவு உணர்விற்கே நூலாக்கித் தாருங்கள். ஈராயிரம் படிகள் அச்சிட்டு "**வாலறிவன்**" வெளியீடாக இவ்வாண்டின் நிறைவு விழாவில் (5 ஆம் ஆண்டு நிறைவு விழா 23-02-2014) நூலை வெளியிட்டுச் சுவைஞர்கட்கு வழங்கலாம் என எண்ணுகிறோம்.

ஈராயிரம் படிகளுக்கான முழுத்தொகையும் வாலறிவன் கழகம் ஏற்கும். தற்போழ்துகூட ஈரோடு, பேராசிரியர் திருநிறை வே. தருமன் உருவா 5000, மருங்கூர் அரசு மேல்நிலைப்

பள்ளித் தமிழாசிரியர் திருநிறை சீர்த்தி சுமதி உருவா 5000 - என்னிடம் நூலுக்காக அளித்துள்ளார்கள். வழமைபோல் நம் வாலறிவன் ஆண்டுவிழா ஒவ்வோர் ஆண்டும் பெப்ருவரித்--திங்களின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் நடத்துவதைப்--போலவே இவ்வாண்டும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அதற்கும் தாங்கள் 23-02-2014 ஆம் நாளைக் குறித்துக் கொண்டு இசைவு தருவீர்களானால் அகமகிழ்வோம். அல்லாவிடின் தங்களின் பயணச் சூழலுக்கு ஏற்ப விழாவினை மாற்றிக் கொள்கிறோம்".

இவ்வார்வத் தளிர்ப்பின் வெளிப்பாடே இவ்வெளியீடாம் என்பதைச் சுட்டுவதில் மகிழ்கிறேன்.

"வள்ளுவம் பரவ வேண்டும்; வாழ்வியல் துலங்க வேண்டும்" என்னும் ஆழிய உணர்வு 1952இல் எனக்கு உண்டாயது! இத்தொடரை ஏற்பேம் என்பார்,

"வள்ளுவம் பரப்ப வேண்டும் வாழ்வியல் துலங்க வேண்டும்" என்று முன்வந்து தொண்டாற்றும் போது அவ்வின்பம் இன்பத்தின்மேல் இன்பச்சுரப்பு ஆகின்றதாம்! 'வான்சிறப்பு' 'தேன்சிறப்பு' ஆவதுபோல் ஆவதாம் அது.

இவ்வாறு வள்ளுவப் பரப்புதல் குடும்பம் குடும்பமாகப் பெருகி உலகாக விரிய வழிகாணல் வள்ளுவத்தோன்றல்களின் கடப்பாடாம்! அதனை இனிது செய்யும் மேத்தாவாணர்க்கும் துணை நிற்பார்க்கும் பரப்புதலில் பங்கு கொள்வார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்**
18 தை 2045
(30-01-2014)

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
அ.கு. எண். - 620 101.
பேசி : 0431-2685328

# அன்பின் சிறப்பு

வாலறிவன் குறள்நெறிக்கழகம் 30-11-2013 அன்று நெய்வேலி நகரியத்தில் நடாத்திய "**வாழ்வியல் இலக்கியவிழா**"--வில் செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார் அவர்கள் "**வள்ளுவர் காட்டும் குடும்பம்**" என்னும் தலைப்பில் ஆற்றிய பொழிவின்பிழிவே இந்நூல். தவச்சாலை தந்த இன்பச்சுரப்பை இனிது உண்டதால் வாலறிவன் பெற்ற அன்பின்சிறப்பே இச்சொல்லோவியத்தொகுப்பு.

இந்நூலை வெளியிடும் வாய்ப்பு, "**வாலறிவன்**" குறள்நெறிக்கழகத்திற்குக் கிட்டியது பெரும்பேறு; ஐந்தாண்டு--களில் வாலறிவனின் வளர்ச்சி, கழகம் என்னும் நிலையினின்--றுயர்ந்து குறள்நெறிக்குடும்பம் என்கிற கலையுணர்வுப் பேருவகையாய். இதில் இணைந்து பயணிக்கும் குடும்பத்தார் அனைவரும் விழைவன்பு கொண்ட விரிந்த பார்வையராய்.

"யாவருங்கேளிர்" என்னும் பூங்குன்றனின் பொதுமைச் சிந்தையும், "ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" என்னும் கலித்தொகையின் மென்கவிதைக் காட்சியும் ஒருசேர இணைந்ததே வாழ்வியலின் விழுமியம் என்பதை, வள்ளுவத்திற்கு வாழ்வியல்உரை வகுத்த **குறள்ஞாயிறு இளங்குமரனார்** தொகுத்தளித்துள்ள இந்நூலின் தாளைப் பற்றி நாம் நடந்தாலே நம் குடும்பத்தில் எப்போதும் இன்ப அன்பு சுரக்கும்.

"**அகவொழுக்கம், உள்ளன்பு, நல்லறிவு, மனவளம், பொதுநலம்**" என்னும் ஐவகைக் கொள்கைகளே வாலறிவன் குடும்பம் பற்றி நடக்கும் கற்றலின் பயனினிமையாய். ஆதலால் எங்கள் "**வாலறிவன் குடும்பம் – வள்ளுவர் காட்டும் குடும்பமே**" என்பதில் பேருவகைப் பெருமிதமே. நாளைய

தலைமுறைகட்கும் இந்நூல் அன்பென்னும் நம்பிக்கை விதையாகத் திகழும்; பண்புக்கனிச் சுவைநல்கி என்றென்றும் மனத்தாலே மகிழும்.

சொற்களை எழுத்தாக்கி நூற்றொகுப்பு வடிவுபெற, எழுத்தையும் இசையையும் ஒருசேரத்தந்த அய்யா இளங்குமரனார் அவர்கட்கும், பல்லாற்றானும் வாலறிவன் வளர்ச்சிக்கு உணர்வோடு உழைப்பையும் நல்கிவரும் பொருட்கொடையீந்த புன்னகைக் குமணர்களுக்கும், பிழையின்றி எழிலுற அச்சிட்டுத் தாள்களை நூல்களாக்கித் தந்த ஸ்ரீராம் அச்சகத்தார்க்கும், முகப்பு, உள்ளோவியம், முன்பின் அட்டை வடிவமைப்பை நுண்கலையுணர்வுடன் கண்ணொற்றிக்கொள்ளும் கவிதையாய்த் தந்த எழிலோவியர் இராம்பாபு அவர்கட்கும் எமது நன்றியினை சொற்களுக்குள் சுருக்கிவிடாது என்றும் செய்ந்நன்றி மறவாது செம்மையாய் இயங்கும் நெஞ்சத்தொடு நான் நெடும்பயணம் தொடர்வேன்.

**"உள்ளம் மலர்ந்தால் புன்சிரிப்பு**
**உணர்ந்து நடந்தால் பெருஞ்சிறப்பு!"**

என்பதை என்றென்றும் **"வள்ளுவர் காட்டும் குடும்பம்"** எல்லார்க்கும் எப்போதும் முழங்கும். இதனை திருக்குறள் பேரொளியின் தீந்தமிழ்க்கனிச்சொற்கள் இம்மன்பதைக்கு மகிழ்வுடனே வழங்கும்.

வாசிப்போம் நூலை! நேசிப்போம் வாழ்வை!

நெய்வேலி-1.
10-02-2014

தோழமையன்பு பொங்க...
- **மேத்தாவாணன்**
"வாலறிவன்" குறள் நெறிக்கழகம்
நெய்வேலி-1.

# “வாலறிவன்” குறள் நெறிக்கழக இரண்டாமாண்டு நிறைவுவிழா

## 27.02.2011



வாலறிவன் கழகத்திற்காய் தீட்டப்பெற்ற முதல்ஓவியம்

---

பொன்மொழிப் போட்டி - முதற்பரிசு

வள்ளுவமே நம் உயிர்நாடி;-எனவே
வாழ்வோம் நாமென்றும் அதைநாடி!

- செ.அஜய்சூர்யா

## "வாலறிவன்" குறள் நெறிக்கழக மூன்றாமாண்டு நிறைவுவிழா 26.02.2012

### கவிதைப்போட்டி-முதற்பரிசு

முப்பால்!

இது-
முதியோரை வணங்கி...
புதியோரை வாழ்த்தும்
முழுமுதற் கவிப்பால்!

– இரா.எழிலரசி

---

### கவிதை - 2012

முப்பால்!

இது-
தந்தை பாடிய...
தமிழ்ப்பாட்டு!
இதுவே நம் -
தமிழ்த்தாய் சமைத்த....
சுவைக்கூட்டு!

– தங்க.இளவரசி

## வள்ளுவர் காட்டும் குடும்பம்

வியப்பினும் வியப்பு, குடும்பம் என்னும் சொல்லின் அருமையும் பெருமையும், ஏன்? நம் கையில் கனியாக வாய்த்த - பழந்தமிழர் மொழி, வாழ்வியல் பற்றிக் கிடைத்த - தொன்மையான நூல் தொல்காப்பியம். நம்மவர், அகவாழ்வு புறவாழ்வு பற்றி விரிய விரியக் கூறும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய பதினெட்டு நூல்களிலும் ஓரிடத்துக் கூடக் குடும்பம் என்னும் சொல்வராமல், வாழ்வியில் நூலாம் திருக்குறளில் மட்டும் ஒரோ ஓர் இடத்திலே இடம் பெறும் சொல் '**குடும்பம்**' என்பது.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டு அளவில் ஊராட்சிக்குக் 'குடும்பு'களும், அக்குடும்புத் தேர்தலுக்குக் 'குடவோலை' முறையும் ஏற்படுவதை அறிகிறோம். குடும்பத்தில் இருந்து வந்ததே 'குடும்பு' என்பது வெளிப்படை.

அப்படியானால், வள்ளுவர் காலத்திற்கு முன்னர்த் தமிழர்க்குக் குடும்ப வாழ்வு ஏற்படவில்லையா? என்று, தமிழர் தொன்மை அகவாழ்வு புறவாழ்வு பற்றி அறிந்தவர்க்கு, 'வினவும் எண்ணம்' வரவே வராது.

அப்பொழுது 'குடி' என்னும் சொல் வழக்கில் இருந்தது. குடிநிலை, குடிப்பெயர். குடிமை ஆகிய சொற்கள் தொல்காப்பியத்தில் அறியக்கிடப்பன. குடிப்பாடு, குடிப்பாக்கம், குடிப்பொருள், குடிபுறங்காத்தல், குடிமுறை, குடியோர் முதலியன சங்க நூல்களில் காணப்படுவன. 'குடிமை' என்பதும், 'குடி செயல்வகை' என்பதும் திருக்குறளில் உள்ள இரண்டு அதிகாரங்கள்.

குடும்ப வாழ்வு பற்றி அறத்துப்பாலில் உரைத்தாலும், பொருட்பால் தொடக்கக் குறளிலேயே 'படை குடி கூழ்' எனக் குடியைக் குறிப்பிடுகிறார். அத்தொடக்கமே அக்கால வரலாற்றுச் சிறப்புப்பட்டயமாம்.

படைகளே குடிகளாகவும், குடிகளே படைகளாகவும் இருந்த கால நிலைக் குறிப்பு அது. கூழ் ஆகிய துய்ப்புணவு இல்லாக்கால், எவர்க்கு வாழ்வுண்டு? ஆதலால், பொருட்பாலிலேயும் குடும்பம் பேசப்படுகிறது என்பது தெளிவு. மூன்றாம் பாலோ இல்லற துறவற வாழ்வுகளின் அடிமனை போல்வது! ஆதலால் வள்ளுவமே குடும்பவாழ்வு என்பதும் 'வீடே நாடு' என்பதும் தெளிவிக்கும் நூல் எனக் கொள்ளல் தகும். வீட்டில் உள்ள துறைகளின் விரிவாக்கம் தானே நாட்டரசுத் துறைகள்!

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை என வரிசைப்படுத்திய வள்ளுவம், நான்காவதாக 'அறன் வலியுறுத்தலை' வைத்து 'இல்வாழ்'வாகத் தொடர்கின்றது.

அறன் வலியுறுத்தலிலேயே, அறத்தின் இலக்கணத்தைச் சொல்லிவிடுகிறார். அது "**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**" (34) என்பது.

குடும்ப வாழ்வின் தொடக்கமே மனத்தில் மாசிலாத் தொடக்கம் என்பதை விளக்குவது தொல்காப்பியம்.

ஒருவனும் ஒருத்தியும் இயற்கையாக உள்ளத்தால் ஒன்றுபட்டு 'ஒருவர்' ஆதலே பழங்காலக் களவொழுக்கம், 'மறை' என்பதும் அது. மறையோர் ஆறு(வழி) என்பதும் அது. தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டபோது "நீயே என் கணவன் ; இப்பிறப்பில் அன்றி எப்பிறப்பாயினும் நீயே கணவன்; யானே உன் மனைவி" எனத் தலைவியும்,

"நின்னைப் பிரியேன் : பிரியின் உயிர்தரியேன்" எனத் தலைவனும் களவுத் தலை நாளில் எடுத்த மனமாசில்லா முடிபே இல்லற மூலமாம்! தலைவன் தலைவியர் கொண்ட காதலைத் தலைவி தன் தோழிக்கு உரைப்பாள். அது, "தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்" எனப்படும். பின்னர்த் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். செவிலி பெற்ற தாய்க்கும், பெற்ற தாய் தன் கணவனுக்கும் அறத்தொடு நிற்பர்!

தலைவன் தலைவியர் கொண்ட காதலறம் கற்பறமாகத் திகழ்ந்து இல்லறமாகச் சிறக்கும். மனமாசின்மையை, இல்வாழ்வின் முன்னாக அறன் வலியுறுத்தலில் வைத்தமை அறிக. "**அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை**" (49) என்பதும் "**அறத்தான் வருவதே இன்பம்**" (39) என்பதும் அறியத்தக்க--னவாம்!

"கரணம் தப்பினால் மரணம்" என்பது மக்கள் வழக்கு. கரணமாவது திருமணச் சடங்கு. அச்சடங்குக்கு ஊறு ஏற்பட்டால் - தடை உண்டானால் - முடிபு என்னாம்? இருவரும் இணைந்து இறப்பாம் என்பதே அதன் பொருளாம்! மனமாசாலே தான், மண் மாசாகின்றது; மண்ணின் விளைவு மாசாகின்றது; காற்றும் நீரும் தொழிலும் பிறவும் மாசாகின்றன. மனமாசில்லாமையே, அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் மூலமும் முதலும். ஆதலால்தான்,

"**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**" (34) எனத் தெளிவித்தார்.

இல்வாழ்வு கொண்ட தலைவன் தலைவியருள் உயர்வு தாழ்வு இல்லை. ஒருவருக்கு ஒருவர் இணை; துணை! இன்னும் சொன்னால், இல்லத்தை ஆளும் இல்லாள்;

மனையை ஆளும் மனையாள் ஆகிய தலைவிக்கே, குடும்பத் தலைமைப்பேறும், தலைவனுக்குத் துணை நிற்றல் நிலையும் உண்டு என்பது வள்ளுவ உள்ளமாம், இதனை,

இல்வாழ்க்கை முதலிரு குறள்களிலேயே பதிவாக்கிவிடுகிறார் வள்ளுவர். அவை,

> **"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
> **நல்லாற்றின் நின்ற துணை"** (41)

என்றும்,

> **"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
> **இல்வாழ்வான் என்பான் துணை"** (42)

என்றும் கூறுகிறார். பின்னே 'பெருமை' என்னும் அதிகாரத்தில்,

> **"ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
> **தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு"** (974)

என்கிறார். "ஒரு முகப்பட்டு வாழும் பெண்ணைப் போல ஆணும் ஒருமுகப்பட்டு வாழ்ந்தாலேயே குடும்பத்துக்குப் பெருமை உண்டாம்" என்பது இதன் பொருளாம்.

சிறந்த கணவனைப் பெற்றால் அவ்வாறு பெற்ற மனைவி தெய்வ வாழ்வினளாகத் திகழ்வாள் என்பதை,

> **"பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
> **புத்தேளிர் வாழும் உலகு"** (58)

என்கிறார். ஆதலால், கணவன் மனைவியருள் உயர்வு தாழ்வு எண்ணமும் அரும்பாமையே வள்ளுவ அறமாம். அன்றியும், பெண்ணின் பெருமையே குடும்பப் பெருமை என்பதால் முப்பாலிலும் பெண்ணின் பெருமை பேசியது வள்ளுவம்.

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள?"** (54)

என அறத்துப்பாலிலும்,

**"பெண்ணே பெருமை உடைத்து"** (907)

எனப் பொருட்பாலிலும்,

**"பெண்ணிற் பெருந்தக்கது இல்"** (1137)

எனக் காமத்துப்பாலிலும் கூறினார் வள்ளுவர்.

புகழ்மிக்க பெண் ஒருத்தி வீட்டில் இருந்தால் தான், மாறுபட்டார் முன்னும் ஏறு போல் நிமிர்ந்த நடையனாய்த் தலைவன் நடையிட முடியும் என்கிறார் (59).

'மங்கலம்' என்று சொல்லப்படுவது "மனைமாட்சியே" என்றும் கூறுகிறார் (60)

திருவள்ளுவர் தாம் கூறும் அறத்தைத் தொடங்குமுன் அதனைக் கேட்பார் மூவராகக் கொள்கிறார். அவர் "கணவன், மனைவி, மக்கள்" என்பார். இம்மூவருள் உலகத்து மக்கள் அனைவரும் அடங்குவர் தாமே! மனையறம் கொள்ளப்புகும் கணவன், தன் தந்தை, தன் தாய், தன் மனைவி ஆகிய மூவரையும் காலமெல்லாம் காக்கக் கடமைப்பட்டவன் என்கிறார். இல்வாழ்க்கை முதற்பாடலே இதுதான். இதனைப் போற்றாமையாலேயே முதியோர் இல்லங்கள் பெருகுகின்றன; ஏதிலியர் இல்லங்கள் முளைக்கின்றன; முறைமன்ற வழக்குகள் ஏறுகின்றன.

முதியவர்களும் அதாவது பெற்றோர்களும் குடும்பச்சூழல், நிலை, வருவாய், தொழில் நிலை என்பவற்றை அறிந்து குடும்பத்துக்குத் தக வாழும் வாழ்வினராக இருத்தல் வேண்டும். அதனால்தான் "நல்லாற்றின்" என்றார். ஒருநாள் ஒருவேளை

- வந்து போவார் அல்லர் என்பதை "நின்ற" (நிலைபெற்ற) என்றார். எங்கேயோ பிறந்து வளர்ந்து வந்தவள் மனைவி. அவளுக்கு வந்த இடமும் சூழலும் உறவும் புதியவை. அவளுக்குக் கணவன் எல்லா வகைகளிலும் உதவியாக இருத்தல் கட்டாயமாம். ஏனெனில், பெற்றோர் உற்றார் உறவு எல்லாம் விடுத்து முற்றிலும் புதிய இடத்திற்கு வந்தவள் மனைவி. அவளுக்கு எல்லாமுமாய் அமைந்தவன் கணவன்! அவன் பெற்றோரும், தாம் பெற்ற பிள்ளையாகப் போற்றிப் பேணல் குடும்ப வழிவழிச் சிறப்புக்கு அடிப்படையாம் என உணர்ந்து கொள்ளல் வேண்டும். மனைவியும், "பிறந்த வீட்டுக்குப் பெருமை சேர்ப்பவளாய், புகுந்த வீட்டுக்கு நற்பேறு நல்குவாளாய்" இருத்தல் வேண்டும்.

'புரிதல்' என்பது குடும்ப உறுப்பினர் அனைவர்க்கும் உரிய பொதுமையதாம். என்னதான் கற்றாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கற்கும் புரிதல் கல்வியே, கல்வியுள் எல்லாம் பெரிய கல்வியாம்!

பற்றற்ற துறவியர் வருவர்; பசித்துயர் ஆற்றமாட்டா வறியர் வருவர்; விருந்தினர் என வருவர்; உறவினர் வரலும் உண்டு! இவர்களைப் பேண நல்ல குடும்ப வாழ்வு அமைந்தோரால் மட்டுமே இயலும்! வருவாரும் "விருந்தாலே கெட்டது குடும்பம்" என்றும், "வந்ததாலே வந்தது பகை" என்றும் ஆக்குவாராய் இருத்தல் ஆகாது. அத்தகையரைத் தெருவிலேயே நிறுத்தி வழியனுப்பி விடலே குடும்ப நலம் பேணலாம். விருந்து என்பதும் உள்ளதைப் பகுத்துண்பதே அன்றிப் பத்துப்பதினைந்து வகை ஆக்கிப்படைப்பதன்று! அதனாலேயே,

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்"** (322)

என்றார் வள்ளுவர். உள்ளதைப் பகுத்து உண்ணலே உரிமை உறவை வளர்ப்பதாம். உணவிலே ஒன்றாதவர், உணர்விலே ஒன்றுவரா?

பழநாள் நிலைவேறு; உணவகம் உறைவகம் இல்லாக் காலம்; உற்றார் உறவையும், சத்திரம் சாவடிகளையும் நம்பிய காலம்! காலநிலை அறியாமல், இடநிலை அறியாமல் செயல்படுவார், இடர்ப்படுபவரும் இடராக்குபவரும் ஆம்.

**“சுமையாகாத பெற்றோரும், சுமையாகக் கருதாத மக்களும் உள்ள குடும்பமே வள்ளுவக் குடும்பம்”.** முதியவர்கள் உள்ள குடும்பம், காவல் தெய்வம் வீட்டில் இருப்பதாக எண்ணத்தக்க குடும்பம்!

“பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” (247) என்பது வள்ளுவம். இற்றை வாழ்வுக்கோ மிகமிக இன்றியமையாதது! நாகரிகப் போலிமையால் நாடும் வீடும் நலியும் நிலை! பக்கத்து வீட்டைப் பார்த்து “அது அவர்கள் நிலை; நமது நிலை நம்மைச் சார்ந்தது” என எண்ணாமல், அவர் அளவிலும், அவர்க்கு மேல் அளவிலும் தேடிக்குவிக்க எண்ணும் மனநிலையர் பெருகும் காலம்! அமைதி, நிறைவு, பொதுநலம் தேய்பிறையெனத் தேய்ந்து வரும் நிலை! தொலைக்காட்சியால் பண்புக்கேடும், மதுக்குடியால் முழுதுறு குடிக்கேடும், இலவயங்களால் உழைப்பு ஒழித்த தீராக் கேடும் தீயாகச் சூழ்ந்து எரிக்கின்ற நிலை! இவற்றை எண்ணின் தற்காப்பும், முற்காப்பும் இன்றியமையாதனவாம். ஏனெனில், இச்சூழலுக்கு இடையேதானே நாம் வாழ வேண்டும்!

தொற்றுநோய் பற்றும் போது என்ன செய்கிறோம்?

தற்காப்பும் முற்காப்பும் கொள்கிறோம் அல்லவா!

அம்மை நோய் வந்தால் வேப்பிலை வாயிலில் கட்டுவது ஏன்?

அம்மை நோய் கண்டுள்ள அறிவிப்பு அது!

பிச்சை வாங்குபவர் அங்கு வாரார்! பிச்சையும் போடார்! சலவைத் துணி எடார்! போடார்! மழித்ததும் செய்யார்! உறவும் தெருவிலே நின்று போவார்! சிற்றூர் வழக்கமாய் இது, தற்காப்பும் முற்காப்பும் இல்லையா?

உன்னைக் காத்துக்கொள் என்று எளிதாகச் சொல்லாது வள்ளுவம்! "உன்னை நீ காதலி" என்று கூறும். அது,

"**தன்னைத்தான் காதலன் ஆதல்**" (209)

என்பது. நாம் நம் உடலை நல்ல வகையால் நோய் நொடி இன்றிக் காக்க வேண்டும் அல்லவா! நாம் படுத்துக் கொண்டால், நம் வேலைபடுத்துக் கொள்ளும்; வருவாய் படுத்துக் கொள்ளும்; குடும்பம் படுத்துக் கொள்ளும். குடும்பச் சுமையைச் சுமக்க வேண்டிய நாம் நலமாக இல்லை என்றால், சுமையாகி விடுவோம் அல்லவா குடும்பத்தினர்க்கு! அதனால்,

"**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**"

என்ற திருமூலர்,

"**ஊனுடம்பு ஆலயம்**"

என்றார். "ஆலயத்தை இறையுறையுள் என்று தூய்மையும் பொலிவும் தோன்ற வைத்துக் கொள்வதுபோல் உன் உடலையும் நலமும் வளமும் பொலிவும் உடையதாய்ப் பேணிப் போற்றிக் கொள்க" என்கிறார்.

உடம்பு பொறிகளையும் புலன்களையும் உடையது; உறுப்புத் தேய்மானமும் உடையது. ஆனால் என்ன வியப்பு

என்றால், நாம் நம்மைக் கெடுக்காமல் இருந்தால் தன்னைத்தானே சரி செய்து கொள்ளும் சீர்மையும் உடையது. அவ்வகையில் உடலுள்ளேயே உடற்கூறு அறிந்த மருத்துவமும், உரிய மருந்தும் இருப்பதாய்ச் செயல்படும் உடலை நாம், கெடுக்காதிருக்க வேண்டும்.

அதனால்தான்,

> **"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்**
> **வகைதெரிவான் கட்டே உலகு"** (27)

என்றும், "ஐந்தவித்தான்" (25) என்றும் வள்ளுவம் கூறியது.

நம்மை நாம் கெடுக்கிறோமா? கெடுப்போமா? என வினவுவார், புகைபிடியார்; வெறியேற்றும் பொடி போட்டுக்கொள்ளார்! தம்மையும், தம் குடும்பத்தையும் தள்ளாட வைக்கும் - உடலிலே உடை இருக்கிறதா என்பது கூடத் தெரியாமல் குடித்துத் தெருவில் கிடக்கும் மானக்கேடு கொள்ளார்! சூதாட்டம் ஆடார்! மாறுபட்ட ஊண்கொள்ளார்! உடம்பறிந்து - செரிமானம் அறிந்து - ஒத்தது அறிந்து - உண்பார்!

உரிய உழைப்பு - உரிய ஓய்வு - உரிய உறக்கம் கொள்வார்! உழையாமல் உண்ணார்! பசியாமலும் உண்ணார்! அவருக்கு மருந்து என்பது வேண்டா! ஆம், வேண்டவே வேண்டா! வேண்டின் "உணவே மருந்து" எனக் கொள்வார்!

ஆடு மாடுகளுக்கு நோய் வந்தால் விரும்பி விரும்பி ஓடி ஓடித் தின்னும் பசும்புல்லையும், தவிட்டையும், பிண்ணாக்குப் புளிங்காடியையும் இலைதழைகளையும் கூடத் தின்னாமல் குடியாமல் ஒதுக்குகின்றனவே! பட்டுணி கிடக்கின்றனவே!

நலமே இருக்கும் போதும் ஒதுக்குவன ஒதுக்கித் தின்கின்றனவே! இதனை நாம் பார்த்தறிந்தாவது கடைப்பிடிக்க வேண்டாவா?

உழைக்காமல் நடக்கவும் செய்யாமல் இருந்த இருக்கையில் இருந்து பணி செய்வார் உடலைக் குறைக்க - தொந்தியைக் குறைக்க - உண்டதை வெளியே தள்ள - என்னென்ன பாடுபடுகிறார். வள்ளுவம், கடுகில் கருமலையை அடக்குவது! ஆழ்கடலென ஆழ்ந்தது! வானென விரிந்தது!

"**தன்னைத்தான் காதலன் ஆதல்**" (209)

என்பது அத்தகையது!

இல்வாழ்வில் தலைவன் தன்னைக் காத்தலைக் கடைசியாகக் குறித்த திருவள்ளுவர் (தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்) (43)

"வாழ்க்கைத் துணை நலத்தில் தலைவிக்கு, முற்படக் காத்தலைக் கூறுகிறார்; அது "தற்காத்து" என்பது. அவள் தற்காத்துக் கொண்டால் தான், தற்கொண்டானைக் காக்க முடியும். அதனால் அடுத்துத் "தற்கொண்டாற் பேணி" என்றார். அடுத்ததாகக் குடும்பவளம், குடும்பநலம் காத்தலால் "தகைசான்ற சொற்காத்து" இவ்வகையாலும் பிறவகை--களாலும் சோர்விலாளாக விளங்க வேண்டும் என்கிறார்.

நாட்டுக்கு முறை காவலைச் சொல்வார் வள்ளுவர். ஆனால், வீட்டுக்கு நிறைகாவலைச் சொல்வார்!

மகளிர் தம் ஒருமுகப்பாட்டால், தம்மையும், தம் கணவரையும், தம் மக்களையும், தம் குடும்பப் புகழையும் காத்துக் கொள்வார்! அஃது அவர் பிறவியொடு பிறந்தமைந்த சட்டமெனச் செய்யாத சட்டம்!

வயிறு வாய்த்துவிட்டால் நாவை அடக்குகிறாரே, தாமே! ஏன்? தான் தன்னுள் ஓருயிரைக் கொண்டுள்ளார். அவ்வுயிர்க்கு ஆவன உண்ணல் – பருகல் – தாமே உண்டாக்கிக் கொண்ட நோன்பு! அந்தப் பத்து மாதங்கள் மட்டுமா அவர் ஈருயிர்! இல்லை மூவுயிர் எக்காலமும்! கணவனுக்கு மனைவியும் மகவும்; மனைவிக்குக் கணவனும் மகவும்! மூவரும் 'ஓராய்த்தப் புள்ளி'யாகி விடுகின்றனர்! (ஃ) இவ்வுண்மை கொண்டே அன்பிலே தொடங்குகிறார், தம் அறநூலைத் திருவள்ளுவர்! அஃது 'அன்புடைமை'! முதல் உடைமை உடல் என்றால், அன்புடைமையே அதன் "உயிர்" என்கிறார்.

"**அன்பின் வழியது உயிர்நிலை**" (80)

"**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு**" (72)

"**அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்**" (71)- என விரிக்கிறார்.

முன்னைக் காதலன்பு இருவரை ஒருவர் ஆக்கியது; பின்னைக் கற்பன்பு, மூவரை ஒருவர் ஆக்கியது!

அந்நிலை தாம் ஆர்வத்தால் தேடிய எப்பொருளினும், உயர் பொருளாக 'மகவை' நினைக்க வைக்கிறது! அதனை உணர்ந்த அறவர் வள்ளுவர்,

"**தம் பொருள் என்பதம் மக்கள்**" (63)

என்றார்! குன்றத்தனைய தாய்ச்செல்வம் குவித்தோரும் "கோயி"லென்றும், 'தீர்த்தம்' என்றும், 'சோதிடம்' என்றும் மலையும் காடும் கடலும் அலைகின்றனரே, மகவொன்று வேண்டி!

அவர் குவித்த செல்வத்தினால் அடைய மாட்டாத இன்பம் மகவால் அடையலாம் என்பதற்காகத்தானே!

உலகத்து உயிர்களையெல்லாம் காக்க மழைப்பேறு! வழிவழியாகக் குடிநலம் காக்க மகப்பேறு! அதனால்

"**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற**" (61)

என்றார். ஒவ்வொருவர் இல்வாழ்விலும் பெறுவன பலப்பல. "**ஆரா இயற்கை அவா**"வால் தேடிக்குவிப்பன எண்ணற்றன. அப்பெறுவன எவற்றிலும் ஒப்பதில்லா ஒரு பேறு, **மகப்பேறு.** அப்பேறும் **அறிவறிந்த மகப்பேறு!** அறிவறிந்த என்றது ஏன்? பிறந்த குடிக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் நானிலத்துக்கும் நலம் பயக்க வேண்டும் குழந்தை, அறிவறியாததாக இருந்தால் அது பிறந்தால் என்ன? பிறவாமல் போனால் என்ன? என, எண்ணி "**அறிவறிந்த மக்கள்**" என்கிறார்.

அறிவுடைய பிறவியெல்லாம் ஆக்கம் செய்வனவா?

கள்வனுக்கு - கடத்தல் காரனுக்கு - கலப்படத்தானுக்கு - கள்ளத்தாள் அடிப்பானுக்கு - கரவாக நச்சுக்குண்டைப் போட்டழிப்பானுக்கு - என்ன அறிவு குறைவா? அவ்வறிவு "காரறிவு" அல்லவா! அவ்வறிவு **அழிவு அறிவு!** ஆதலால், அறிவறிந்ததுடன் பழிச் செயல் எதனைச் செய்யவும் எணணாப் பிறவியாக இருக்க வேண்டும் என்று கூறுவாராய்ப்,

"**பழிபிறங்காப் பண்புடை மக்கள்**" (62) என்கிறார்!

ஒரு நூலகத்தையே மண்டையில் ஏற்றிக் கொண்டு, உண்டு உடுத்து உவந்து எவ்வுயிர்க்கும் எக்கேடும் செய்யாமல் வீட்டுள் ஒடுங்கிக்கிடக்கும் பிறவி, பிறந்த பயன் என்ன?

பிறருக்கென - பேருலகுக்கென - வாழும் பிறவியாகவும் இருத்தல் அல்லவோ, பெற்றெடுத்த பெற்றோரினும் பேருலகுக்கு இனியது செய்யும் மகவு! அம்மகப்பேறே பெருந்தக்க மகப்பேறு

என்பாராய்த்,

> **“தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
> **மன்னுயிர்க் கெல்லாம் இனிது”** (68)

என்றார்!

அதுதானே இல்வாழ்வின் **“பண்பும் பயனும்”** என்ற வள்ளுவர், அரிமாப் போல முன்னோக்கு நோக்க வைக்கிறார்! பக்கம் நோக்க வைக்கிறார்! விண்ணக இன்பம் என்கிறார்களே! கற்பகம் என்கிறார்களே! பாற்கடல் கடைந்த “அமிழ்து” என்கிறார்களே! வீடுபேறு(முத்தி) நிரயம்(நரகம்) என்கிறார்களே! கயிலாயபதவி வைகுண்டபதவி என்றெல்லாம் கூறுகிறார்களே! இவர்கள் கண்டவர்களா? கண்டவர் இங்கு மீளவும் வருவரா? வந்து “இப்படி, இப்படி ” என்று கூறுவரா? எனத் தம்முள் எண்ணி - எள்ளிக் - குறுநகை நகைக்கிறார். அப்பொழுதே, பொருந்தப் பொய்த்தலாய்க் “கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்” என்னும் பழமொழி வழங்கியிருக்கும் போலும்! “என்ன மக்கள் இவர்கள்? ஆறறிவு என்பது மன அறிவு! அது மக்கட்பிறவிக்கு உரியது! அவ்வுரிமை அற்றுப்போய பிறவியரே இப்பொய்யுரைக்குச் செவிசாய்ப்பவர்” என எண்ணுகிறார்.

> **“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்ப தறிவு”** (423)

> **“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்ப தறிவு”** (355)

எனத்தாம் கூறியவற்றை எண்ண வைக்கிறார்!

வீட்டிலேயே அடைவது தானே வீடுபேறு! அவரவர் நெஞ்சம் தானே இன்ப உலகும், நிரயஉலகும்! நல்ல கணவனுக்கு நல்ல மனைவி வாய்ப்பதே, வேண்டுவ அறிந்து, விரும்புவ உணர்ந்து வழங்கும் கற்பகம் என்பதை,

"**இல்லது என்? இல்லவள் மாண்பானால்**" (53)

என்கிறார்!

நல்ல கணவன் வாய்த்த நல்ல மனைவியொடு கூடி வாழும் வாழ்வுதானே, 'வைகுண்ட பதவி' என்பதைத்,

"**தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு**" (1103)

என்கிறார்!

தக்க கணவனுக்குத் தக்க மனைவி வாய்த்து அவளொடு கூடி வாழ்தல் உயிர் தளிர்க்க வைக்கும் அமிழ்தம்; அவள் தரும் குழந்தை, அமிழ்து தந்த அமிழ்து; அக்குழந்தை மழலை அமிழ்து; அக்குழந்தை தன் சிறுகையால் அளாவிய உணவை உண்ணல் அமிழ்து; குடும்பத்தையே அமிழ்த நிலையமாக்கும் இவ்வமிழ்தை அன்றிப் 'பாற்கடல்' அமிழ்து என ஒன்று உண்டா? என்பவற்றை,

"**உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள்**" (1106)

"**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்**" (64)

"**குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்**" (66)

என்கிறார்!

**வான்சிறப்பாம் தேன்சுரப்பு** வீட்டுளேயே உள்ளது என்பதை,

"**வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி**" (1192)

என்கிறார். "உழவர்க்கு வேண்டும் போதெல்லாம் பெய்யும்

பருவமழை போன்றவர் நன்மனைவியர் வாய்ப்பது" என்பது இதன் பொருளாம்.

**"கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்**
**சொல்ல"ப்பட்ட பெருமிதம் நான்கே"**

என்பார் தொல்காப்பியர். தறுகண் என்பது போராற்றல். இவற்றோடு, 'நல்ல குடும்ப வாழ்வு' என்பதையும் சேர்த்துக் கொள்ள வைக்கிறார் திருவள்ளுவர். அது,

**"வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே**
**வாழுநம் என்னும் செருக்கு"** (1193)

என்கிறார்.

குடும்பவாழ்வு என்பது 'கா'ப்போல்வது, 'கா' என்பது நிறைகோல், காவுதடியாம் காவடி ; காவட்டு என்பது மக்கள் வழக்கு!

குடும்பம் ஒரு காவடி; அக்காவடியைக் கணவன் மனைவி ஆகிய இருவரும் சமமாகத் தாங்க வேண்டும்! அதுவே இன்பமாம் என்றும் (1196) நல்ல குடும்பத்தின் இன்பம், விதை இல்லாத கனியைச் சுவைப்பது போல்வது என்றும் (1191) காமத்துப்பாலில் சுட்டுவார்.

இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு மனைவி மக்கள் உற்றார் உறவு சுற்றத்துடன், வாழ வேண்டும் முறைப்படி வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பதை,

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"** (50)

என்று **இல்வாழ்க்கை** அதிகார நிறைவில் கூறுவார்.

'**அந்தநாள்**' என்பதொரு நூல்; அறிஞர் **மு.வ.** எழுதியது; புனைகதை. அதில் குடும்ப வாழ்வு பற்றியதொரு செய்தி;

"வீட்டுக்கு வெளியே நிற்க வேண்டிய உலகம் வேறு; வீட்டுக்கு உள்ளே வரவேண்டிய உலகம் வேறு. வீட்டுக்கு வெளியே நிற்க வேண்டிய உலகம் வீட்டுக்குள் வந்துவிட்டால் அன்பான மனங்களில் அல்லல் புகுந்துவிடும்" என்பது அச்செய்தி.

**குடும்பம்** அல்லது வீடு என்பது திருக்கோயில் போன்றது. நம்முடைய முந்தையர் வாழ்ந்த இடம். புறத்தே நடப்பதற்குப் போட்டுக்கொண்ட மிதியடியைக் கழற்றி, வீட்டு வாயில் முகப்பில் போட்டுவிட்டு வீட்டுள் புகுவது போல், வெளியுலகத்தையும் தெருவிலேயே அகற்றிவிட்டு வீட்டுள்புகுதல் வேண்டும். வெளிஉலகம் என்பது, சமய உலகம், சாதி உலகம், கட்சி உலகம், அரசியல் உலகம், போட்டி உலகம், பெறாமை உலகம், பகை உலகம், நட்பு உலகம், வணிக உலகம், வட்டி உலகம், வழக்கு உலகம், வம்புலகம், அதிகார உலகம், ஆணை உலகம் முதலியன. **இவை வீட்டுள் புகல் ஆகாது! புகுந்தால் வீடு வீடாக இராது.**

வீட்டுள் புகும் போது, தந்தையாக - தாயாக - தாத்தாவாக - பாட்டியாக - மக்களாக - உடன்பிறப்பாக - கொண்டவராக - கொடுத்தவராக - வரவேண்டும்!

இச்செய்தியை வள்ளுவப் பிழிவாகக் கொள்ளலாம்.

# “வாலறிவன்” குறள் நெறிக்கழக மூன்றாமாண்டு நிறைவுவிழா

## 26.02.2012




ஓவியப்போட்டி–முதற்பரிசு

ஐ.ஜெயபாரதி

---

பொன்மொழிப்போட்டி–முதற்பரிசு

வாழ்க்கையே பெரும் எதிர்ப்புமுனை;-பயில்வோம்
வள்ளுவமே நமது திருப்புமுனை!

– ச.மணிமேகலை

## “வாலறிவன்” குறள் நெறிக்கழக நான்காமாண்டு நிறைவுவிழா

## 24.02.2013



ஓவியப்போட்டி - பார்வை வரைவோவியம்

## கவிதை-2012

### திருக்குறள்!

இது-
கண்வழி நுழைந்து...
கருத்துவிழி திறந்த
ஓசைகளில்
தொலைந்துபோகா...
ஆசைப்பாடல்!

- த.ஆகாஷ்

வீட்டுலகுள் இருக்க வேண்டியவை "**அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஒப்புரவறிதல், ஈகை, புகழ், அருளுடைமை, தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்தல்**" என்பவை. இவை இருந்து சிறப்பிக்க வேண்டும்.

பிறனில் விழைதல், அழுக்காறு கொள்ளல், பிறர் பொருளை விரும்புதல், பயனில சொல்லல், தீவினை புரிதல், புலால் ஏற்றல், கூடா ஒழுக்கம் கொள்ளல், களவு செய்தல், சினமுறல், இன்னாதவை செய்தல், கொலை புரிதல், நிலையாமை உணராமை, அவாவுறுதல் என்பவை புகாமல் அகற்றப்பட வேண்டும்!

தென்றல் வரும் போது, பலகணியைத் திறந்து வைப்பது போலவும், வாடைக்குளிர் வரும் போது, பலகணியை மூடிவைப்பது போலவும் இயல்பாகச் செய்யப்பட வேண்டியவை! இவை திருக்குறள் அறத்துப்பால் **அதிகாரத் திரட்டாகும்**. இனி இவற்றின் **பொருள் திரட்டைச்** சுருங்கிய அளவில் காணலாம்.

## அன்புடைமை :

இல்வாழ்வின் அடிப்படைப் பண்பு அன்பு. தனக்கென வாழாமல் தன்னைச் சார்ந்தார்க்கும் தொடர்புடையார்க்கும் உதவியாக - நலப்பாடு செய்பவராக வாழ்தல். பிறர் மனம் நோகச் செய்யாமையும், விட்டுக் கொடுத்து வாழ்தலும், கலந்துரையாடி ஒருவர் கருத்தை ஒருவர் உணர்ந்து போற்றலும், குடும்பக் கூட்டுக்கு மாறானவை செய்யாமையும் அன்பின் அடையாளமாகும்..

இல்லற வாழ்வின் வித்தும் முளையுமாய் அமைவதே

அன்பு. அவ்வன்பின் விரிவாக்கமே அருள் வாழ்வின் பேறாக அமையும்.

அன்பு உறையும் வீட்டில், இன்பும் உடன் உறையும்! வன்பு தலைகாட்டவும் செய்யாது என்பது உறுதியாம்.

## விருந்தோம்பல் :

'விருந்து' என்பது புதியராக வருவார்க்குத் தம்மால் இயன்ற உதவி செய்தல். உதவியில் தலையாயது உணவு வழங்குதல். குடும்ப வாழ்வின் பெருமை, விருந்தோம்பலால் விளக்கமாகும். விருந்தினரை முகமலர்ந்து பார்த்து வரவேற்று இன்சொல் கூறி இருப்பதைப் பகுத்துண்டு இனிது வாழ்த்தி விடுப்பது இருபாலும் நலமாம். விருந்து செய்தலால் இழப்பு இல்லை; இல்வாழ்வுக்கு நலம் கூட்டும், தக்க அறிவர், துறவர் விருந்தினராக வருதலால் அவ்வீட்டில் இருந்த சிறுசிறு பிணக்குகளும் தீர்ந்து போகும்! இல்லறமும் சிறந்தோங்கும். விருந்தோம்பும் இன்பம் எவ்வின்பத்தினும் மிக்க இன்பமாக அமையும்.

## இனியவை கூறல் :

கொடையில் எல்லாம் இனிய கொடை - செலவில்லாக் கொடை - முகமலர்ந்து இனியவை கூறி மகிழும் கொடையாம். இன்சொல்லில் இரக்கம் இருக்கும்; உருக்கம் புலப்படும். இனியவை கூறலால் உண்டாகும் இன்பம் எவ்வொன்றாலும் ஏற்படாது. இன்சொல் கூறல், துன்ப நோய்க்கு வாய்த்த, மாறுபாடு செய்யா மருந்து போல்வது. பணிவுடன் கூறும் இன்சொல் அணிகலம் போல்வது. "**சுவைக்கனியாம் வாழை மா பலா வென்னும் முக்கனிகளினும் உயர்கனி இன்சொல்லே!**" ஏனெனில், அக்கனிகள் உண்ணும் போது மட்டுமே இன்பம். இன்சொல்லாம் கனியோ எண்ணும்போதெல்லாம் இன்பமாம்.

## செய்ந்நன்றி அறிதல் :

நாம் எதுவும் செய்யாமல் இருக்க நமக்குச் செய்யும் உதவி, காலத்தால் செய்யும் உதவி, பின் என்ன பயன் என எண்ணாமல் செய்த உதவி, எவ்வளவு சிறிதாயினும் பெரிதினும் பெரிதாம். செய்யும் உதவியின் சிறப்பு செய்த பொருளளவில் இல்லை; அவ்வுதவியைப் பெற்றோரின் பண்பைப் பொறுத்துச் சிறப்புறும். துன்பம் வருங்கால் முன்வந்து அதனைத் துடைப்பவர் செயல், தம் வாழ்நாளெல்லாம் நினைக்கத்தக்கதாம். அவர் கேடுபல செய்தவர் எனினும் செய்ததொரு சீரிய உதவியால் அவையெல்லாம் மறந்துபோம். நற்பண்புகளில் எல்லாம் நற்பண்பு செய்ந்நன்றி மறவாமையேயாம்!

## நடுவு நிலைமை :

ஆட்சிக்கும் முறைமன்றத்திற்கும் வேண்டிய நடுவு நிலைமை வீட்டுக்கும் வேண்டுமா? வீடுகளின் தொகுப்பே நாடு என்றால், நாட்டுக்கு வேண்டுவன எல்லாமும் வீட்டுக்கும் வேண்டுவனதாமே! மக்களுள் வேறுபாடு காட்டி அன்பு செலுத்தும் பெற்றோர் இலரா! வந்த மருமகளைச் சொந்த (மரு)மகளாகக் கருதாத மாமன் மாமியர் இலரா? தங்கம் நிறுக்கும் தராசைக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து எடைபோடுவானேன்? காற்றாலும் நடுவுநிலை கெடும் என்பதால் தானே! நடுவுநிலை குடும்பத்திலே கால் கொள்ளவில்லை என்றால், எங்கும் நடுவுநிலை இல்லாது ஒழியும். ஆதலால்தான், நுண்ணிதின் எண்ணிய வள்ளுவர் இல்லறத்திலே வைத்தார். ஒருவர் செய்த நன்றியை எண்ணிக்கூட நடுவுநிலை தவறாதே! செய்ந்நன்றி அறிதல் உன்னைச் சார்ந்தது. நடுவு நிலைமையோ பொதுமை சார்ந்தது. இரண்டையும் போட்டுக் குழப்பாதே என்பதை வலியுறுத்தவே செய்ந்நன்றி அறிதலை அடுத்தே நடுவு-

-நிலைமையை வைத்தார். எவ்வளவு நலம் தருவதாயினும் நடுவுநிலை தவறியதாய் வரும் ஆக்கத்தைக் கொள்ளாதே! கொண்டால் உனக்குத் தீராக்கேடே. தக்கார் என்பார் நடுவுநிலை போற்றுபவரே. நீ நடுவுநிலை போற்றுதலால் தீராவறுமையே வரினும் அவ்வறுமையும் பெருமையேயாம். எவர்க்கும் வேண்டிய நடுவுநிலையை வணிகர் சீராகக் கடைப்பிடித்தால் அவர் அறவணிகரும் ஆகும் பேறும் பெறுவார்.

## அடக்கமுடைமை :

அசையா மலைபோல் பெரியன் அடக்கமுடையவன்; தீயனவற்றை நெருங்காத அடக்கம் மாமந்தன் ஆக்கும். ஆமை தன் உறுப்புகள் ஐந்தையும் உள்ளடக்கிக் கொள்வது போல் ஐம்புலனையும் அடக்கி வாழ்பவன் மாப்பெருவீரன்; அமரிடத்துக் கொள்ளும் வெற்றியனிலும் மேம்பட்ட வெற்றியன்! தீயால் சுட்டபுண்ணும் ஆறிப்போம்; நா என்னும் தீயால் சுட்டபுண் என்றும் ஆறவே ஆறாது. ஆதலால், நாவடக்கம் போற்றல் கடன். அடக்கம் கோழைத்தனம் அன்று; ஆளுமையின் சான்று அது.

## ஒழுக்கமுடைமை :

அருவிநீர் ஒழுக்கென மாசிலா வாழ்வே ஒழுக்கமாம்; ஒழுக்கமே குடிமைச் சிறப்பு; ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது; ஒழுக்கத்தையுடையவன் தவறியும்கூடத் தகவிலாச் சொல்லைச் சொல்லான்; நன்மைகளுக்கெல்லாம் அடிப்படையானது நல்லொழுக்கமே. கற்ற கல்வியை மறந்தாலும் மீளக்கற்றுப் பெற்றுக்கொள்ளலாம். ஒழுக்கத்தில் தவறியவன் அத்தவற்றை ஒழித்தாலும், பழைய ஒழுக்கக் கேட்டுப்பழி போகாமல் நிற்கவே செய்யும் என்கிறார்.

"வாலறிவன்" குறள் நெறிக்கழக
நான்காமாண்டு நிறைவுவிழா
24.02.2013



ஓவியப்போட்டி-முதற்பரிசு-இளையர்பிரிவு
பு.சாருதர்சனா

---

பொன்மொழி-2013

அன்னை வழியில் பிள்ளை;- திருக்குறள்
அறமே வாழ்வின் எல்லை!

-கோ.மோகனா

## “வாலறிவன்” குறள் நெறிக்கழக நான்காமாண்டு நிறைவுவிழா 24.02.2013

### கவிதைப்போட்டி-முதற்பரிசு

**திருவள்ளுவர்!**

அன்பு விதை...
பண்புக்கனி;
பற்றுடன் தந்த...
பாச விஞ்ஞானி!

- ச.மணிமேகலை

---

### கவிதை-2013

**திருவள்ளுவர்!**

தனித்தமிழ்த் தறியில்...
திருக்குறள் ஆடை!
அன்னைத் தமிழுக்கு...
அணிவித்த முதல்வன்!

–சி.புவனசண்முகானந்தம்

## பொறையுடைமை :

பொறையாவது, பொறுமை. பொறை-சுமை; தாங்காத பாரம் ஏறினாலும், தாங்காத சினம் வசை வந்தாலும், தாங்குதல் பொறையாம். அகழ்வாரையும் தாங்கும் நிலத்தை உவமை காட்டினார் வள்ளுவர். பொறுத்தல் சிறப்பு; அதனை மறத்தல் அதனினும் சிறப்பு; ஒறுத்தால் ஒருநாள் இன்பம்; பொறுத்தால் இறப்பளவும் இன்பம்; தலைப்பட்ட நோன்பு தவநோன்பு; அதனினும் மேம்பட்ட நோன்பு இன்னாச் சொல் தாங்கும் நோன்பு; வலிமைகளுள் எல்லாம் வலிமை பொறுமையே என்பவை பொறையுடைமைப் பொறுக்கு மணிகள்.

## ஒப்புரவறிதல் :

நல்லார் அல்லார், வளவர் வறியர், பெரியர் சிறியர் எனப்பார்த்தா மழை பொழிகிறது? எல்லார்க்கும் ஒப்பப் பொழியவில்லையா? அதைப்போல் ஒப்புரவு கொள்க என்கிறார். ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஒப்புரவுச் சான்றில்லையா எனச் சுட்டுகிறார். நூற்றுக்கு நூறும் ஒப்புப் பார்த்தால் ஒருவரும் இரார். நம்மியல்புக்கு எவ்வெவ்-வகையால் ஒத்தாரோ அவ்வவ் வகையால் ஒத்திருத்தலே உயிர்வாழ்வுச் சான்று. ஒப்புரவு வாழ்வால் கேடு வராது! அப்படி வரினும் ஒப்புரவின் உயர்வு அறிந்தார், அதனைப் பொருட்டாக எண்ணார் என்கிறார்.

## ஈகை :

வறியவர்க்குத் தருவதே ஈகை; வாய்ப்புடையவர்க்கு வழங்குவது கைம்மாற்றுப்போல்வது. ‘இல்லை’ என்று

வருவோருக்கு நீயும் 'இல்லை' என்னாது கொடு; கொடைகளில் எல்லாம் உயர் கொடை **பசியாற்றும்** கொடை. அற்றார் பசி நீக்கல் வைப்பகத்தில் இட்டு வைக்கும் நிலை வைப்பு ஒப்பது. இரப்பாரினும் இழிமையர், நிரம்ப இருந்தும் தமக்கென்றே கொண்டு நுகர்பவர் என்கிறார் 'பேராசான்' வள்ளுவர்.

## புகழ் :

"புகழ்" என்பது தேடிப்பெறுவதன்று; தானே தம்மிடம் ஓடி வந்து புக வாழ்வது. புகழ் வாழ்வே வாழ்வாவது; புகழுண்டாக வாழாதவர்; தம்மை நோவதை விட்டுப் புகழாக வாழ்வாரை எண்ணி நோவது ஏன்? அழியாப் பொருள் என்பது புகழ் ஒன்று தானே! அப்புகழ் தானே உயிர் வாழ்வின் விளைவாம் ஊதியம்! புகழாளரால் தானே அவர் பிறந்த மண்ணுக்கே பெருமை உண்டாகின்றது என்கிறார் பெருநாவலர்.

இல்லறமாம் அடித்தளத்தின்மேல் எழுப்பப்படும் மாடியே துறவறம்! அதனால் 'அறம்' கூறும் பாலிலே முதற்கண் இல்லறத்தை வைத்து, அடுத்தே துறவறத்தை வைத்தார். இல்லறத்தை **அன்பிலே** தொடங்கிய அவர், துறவறத்தை **அருளிலே** தொடங்கினார். தொல்காப்பியர் காட்டிய நெறி அது. **"பொருளொடு புணர்ந்த பக்கம், அருளொடு புணர்ந்த அகற்சி" என்றதன் விரிவாக்கமே திருக்குறள் அறத்துப்பாலாம்.** அன்பு பெற்ற பிள்ளையே அருள் என்பதை எண்ணினால் இரண்டன் "தாய் சேய்" தொடர்பு தெளிவாகும். இல்லற வாழ்வு நிறைவாக மணிவிழா முதலாக எடுக்கும் விழாக்களும் தெளிவிக்கும். இல்லறத் துறவே - இல்லில் இருந்து கொண்டு துறவராக வாழும் வாழ்வே அஃதாம்.

## அருளுடைமை :

அன்பு தொடர்பு உடையாரிடத்தும் தொடர்புடைய உயிர்களிடத்தும் காட்டும் நேயம். ஆனால் அருளோ அனைத்துயிர்களிடத்தும் காட்டும் நேயமாம். வாடிய பயிரையும் ஆடிய கொடியையும் மயிலையும் கண்டு வள்ளலாரும் பாரியும் பேகனும் உருகினர் அல்லரோ; அஃது அருளாம்! அதனால் செல்வங்களில் எல்லாம் செல்வம் அருளே என்றார் திருவள்ளுவர். அருளாள்வார்க்கு அல்லல் இல்லை. அருளில்லார்தாம், இல்லாராம்! அருளாளர் எல்லாமும் உடைய பேருடையாராம். அருளாளர் நிலையே உலகுய்யும் நிலை என அருள்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

## தவம் :

இல்லில் இருந்தே துறவராக வாழ்ந்தாலும், தனித்துறவராக வாழ்ந்தாலும் அவர், தமக்கு வந்த துயரைத் தாங்குவார்; பிற உயிர்க்குத் துயர் செய்யார்! தவத்தின் அடையாளம் அதுவே. செயலற்றுக் கிடப்பது தவமன்று; தத்தம் கடமையை உணர்ந்து செம்மையாகச் செய்வதே தவம். மனவலிமையர்க்கே தவத்தன்மை வாய்க்கும். அவர் தவக்கோலம் கொள்ளலாம்; பிறர் தவக்கோலம் கொள்ளல் அவக்கோலமாம். அவர்க்குப் பகைவராவார் எவரும் இலர்; அவரைச் சார்ந்தார், பெறத்தக்க நலங்கள் எல்லாமும் பெறுவார்! இறப்பையும் எதிர்கொண்டு வரவேற்கும் இயல்பர் தவத்தர். இவை குறள் நெறித் தவத்தர் இயல்பு.

**வாய்மை :**

வாய், வாய்த்தது வாய்மைக்கே; அவ்வாய்மை தீயசொல் எதுவும் சொல்லாதது; பிறர்க்கு நலம் ஏற்படும் எனின் அப்பொழுதில் மட்டும் பொய் சொல்லவும் துணிவதும் வாய்மை. பொய்யாது வாய்மையைப் போற்றினால் எல்லா அறங்களும் செய்ததாய் அமையும். தவம் செய்வதனினும் கொடை புரிவதனினும் வாய்மை தவறாமையே மேம்பட்டதாம்; அறங்கள் அனைத்தும் செய்ததுமாம் என்பது வாய்மைத் தொகுப்பு.

**துறவு :**

வள்ளுவத்துறவு, மனத்துறவாம்; எவ்வெவற்றை வேண்டா வேண்டா என்று ஒதுக்குகிறோமோ, அவ்வவற்றால் துன்பம் இல்லை. வாய்ப்புள்ள போதே, வேண்டா எனத் துறத்தலே துறவு. ‘யான்’ என்பதையும் ‘எனது’ என்பதையும் துறந்தவர்க்குத் தம் உடம்பும் வேண்டாச் சுமைபோல் ஆகிவிடும். ஆதலால், அவரைத் துயர் எதுவும் பற்றவே பற்றாது; அவர் சார்பு அனைத்தும் பற்றற்றாரைப் பற்றலாகவே அமையும்.

**மெய்யுணர்தல் :**

“நிலைபேறானது இது; நிலைபேறற்றது இது” என்பதை அறிவதே மெய்யுணர்தல். நிலையற்றதால், நிலை பெற்றதை அடைதலே மேம்பட்ட மெய்யுணர்வு. அவர், ஐயத்தின் நீங்கியவர்; வையகத்திலேயே வானின்பம் கொண்டவர்; அவர் பிறப்பு என்னும் அறியாமை நீங்கிய அறிவர்; அவர் அவா, வெகுளி, அறியாமை ஆயவை அற்றார். வாழும்போதே வீடுபேறு பெற்ற நிறைவாழ்வர் அவர்.

அன்புடைமை முதல் மெய்யுணர்தல் இறுதியாகக் கூறப்பட்டவை, உற்றார் உறவொடு வாழும் இல்லறத்துறவறத் தமிழ் நெறிவாழ்வொடும் ஒன்றியிருப்பவை. **முன்னே கூறிய வீட்டுலகாக அமைந்தவை;** இனிப், **புகக்கூடா வெளியுலகை வரிசையாகக் காண்போம்.**

## பிறனில் விழையாமை :

குடும்ப அன்பை - குடும்பப் பெருமையை - குடும்ப வளத்தைக் கெடுப்பது பிறர்க்குரியராம் ஒருவரைக் கூடிவாழ்தல்! ஒரு வீட்டார்க்கு அன்று; இருவீட்டார்க்குமே கேடாம். பிறர்மனை கருதாமையே ஆண்மையுள் ஆண்மை என்பது வள்ளுவம். அறன்கடை நின்றாராம் அவர்க்குப் பகை பாவம் அச்சம் பழி என்பவை நீங்கா. நீ எவ்வறம் செய்யாவிடினும் போ! பிறன்மனையை விரும்பிப் போயொழியாதே என்பது வள்ளுவ ஆணை.

## அழுக்காறாமை :

பொறாமை ஆகாது ; பொறாமையைப் புறத்தே தள்ளுதல் வேண்டும் என்பது அழுக்காறாமையாம். அருவி நீரைவிட்டு சாய்க்கடை நீரில் நீராடலாமா? அழுக்காறு சாய்க்கடைதானே! அழுக்காறு, இழுக்காறு; வழுக்காறு; ஒழுக்காறு ஆகாதது.

## வெஃகாமை :

வெஃகாமை யாவது பிறர் உடைமையை விரும்பாமை. அறிவுடையரோ, அடக்கம் உடையவரோ பிறர் உடைமையை விரும்பார். பிறருடைமையை விரும்புதல் தன் பொருளுக்கும், குடிப்பெருமைக்கும், அமைந்த வாழ்வுக்கும் கேடேயாம். பிறர் பொருளையோ பிற உடைமைகளையோ விரும்பா வாழ்வே, வெற்றி வாழ்வாம்.

## பயனில சொல்லாமை :

பயனிலாச்சொல், மணியில்லா நெல்போலும் பதர்ச்சொல்; அதனைச் சொல்வானும் பதர், கேட்பானும் பதர்; நன்மைதாராத சொல்லைச் சொன்னாலும், பயன்தாராத சொல்லைச் சொல்லாதே. சொன்னால் உன்சீர்மையும் குன்றும்; சிறப்பும் குன்றும்; அறிவுடையவரோ, தெளிவுடை--யவரோ பயனிலாச் சொல்லைச் சொல்லார்.

## தீவினை அச்சம் :

'தீ' ஆக்கமும் செய்யும்; அழிவும் செய்யும்; ஆனால் தீயவனோ அழிவை அன்றி ஆக்கம் செய்யான்; அவன், தீயினும் அஞ்சத்தக்கவன். தீமை செய்வார்க்கும் மறுத்துத் தீமை செய்யாமையே அறிவுடைமை. எத்தனை பகைக்கும் தப்பலாம் ஆனால் தான் செய்த தீவினைப்பயனை அடையாமல் தப்பவே முடியாது. உன் நிழலை விட்டுத் தப்ப உன்னால் முடியுமா? என வினவுகிறார்.

## புலால் மறுத்தல் :

புலால் உண்ணாக்குடியில் நீ பிறந்திருக்கலாம்; புலால் உண்ணும் குடியில் நீ பிறந்திருக்கலாம். அவற்றை எண்ணல் வேண்டா! உன் புலாலை வளர்க்க, இன்னொன்றன் புலாலை உண்ணல் நன்றன்று என்று தள்ளுதல் உன் உடலுக்கும் நன்மை; உளத்துக்கும் நன்மை; உன்னுயிர்க்கும் நன்மை! நோன்பு நாளில் உண்ணவில்லை அல்லவா புலால்! மருத்துவர் சொல்லால் புலாலை விடுதல் இல்லையா! அப்படி நீயே விடுதல் நன்றல்லவா! **புலால் அன்றி வேறு உணவு இல்லாரைக் காட்டித் தப்பாதே! உடல் வலுவுக்காம் எனப் புரியாமல் பேசாதே!** யானையைப்பார்; காளையைப் பார்;

பசுவைப் பார்! அந்த வலிமை, அந்தப் பயன் புலாலுண்ணிகளிடம் உண்டா? எண்ணிப்பார்த்து நீயே புலாலை மறுத்தல் நன்று! அருளாளனோ தவத்தனோ புலாலைக் கருதவே கருதான் என்றே, இரண்டன் இடையே வைத்தார் வாழ்வியல் காட்ட வந்த வள்ளுவர்.

## கூடா ஒழுக்கம் :

கைக்கொள்ளக் கூடாத ஒழுக்கமே கூடா ஒழுக்கமாம். இல்லறத்துறவன் எனினும் தனித்துறவன் எனினும் போலிமை, வஞ்சம், ஏமாற்றும் தோற்றம், மாசுபட்ட செயல் கொள்ளல் ஆகாது. கொண்டால் அது, புதரில் மறைந்து வேட்டையாடு வோனையும், புலித்தோல் போர்த்துப் புல்மேயும் ஆள்போலவும், நேராக அமைந்து நெஞ்சில் பாயும் அம்பு போலவும் ஆகும் என்கிறார்.

## கள்ளாமை :

கள்ளாமை என்பது களவு செய்யக் கருதாமை. திருட நினைத்தாலும் திருட்டே என்பது வள்ளுவம்; எண்ணம் வந்துவிட்டவன் பொழுது பார்த்துக் கொண்டு தானே இருப்பான்! களவினால் வரும் ஆக்கம், ஆக்கம் ஆகாது. களவு செய்வானுக்கு என்றும் தீரா அழிவேயாம். அன்போ அருளோ அளவோ அறியா அழிமானப் பிறப்பு, அப்பிறப்பு நற்பேறு கள்வனுக்கு என்றும் வரவே வராது என்கிறார்.

## வெகுளாமை :

தன்னடக்கம் இல்லான் கைப்பொருள் வெகுளியாம். சினம் என்பது தன்னை உடையானை அன்றி அவன் சுற்றத்தையும் அழிக்கும். தன்னை ஒருவன் காக்க வேண்டும்

என்றால், சினம் வாராமல் காக்க வேண்டும். தீயால் சுடுவது போல ஒருவன் தீமை செய்தாலும் அவன் தன் தவறுணர்ந்து தன்னைச் சேர்ந்தால் அப்பொழுதில் வெகுளி கொள்ளாமை நலமாம். சினம் கொள்ளல் தனக்குத் தானே தேடிக் கொள்ளும் பகையாம் என்கிறார்.

## இன்னா செய்யாமை :

துன்பம் செய்வதெல்லாம் சுவரில் அடித்த பந்து மீள்வது போல் திருப்பித்தன்பால் வந்தே தீரும். தனக்கு இன்பத்தை விரும்புபவன் பிறர்க்குத் துன்பம் செய்யலாமா? அறிவைப் பெற்ற பயன் பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாமை அல்லவோ! இன்னா செய்தார்க்குத் தண்டனை அவர்க்கு இனியவை செய்து திருத்துதலேயாம். சால்பாளன் என்பான், இன்னாதவை செய்தவனுக்கும் இனியவை செய்வதேயாம்.

## கொல்லாமை :

ஒரோ ஓர் அறம் செய்ய வேண்டும் என்றால் அவ்வறம் கொல்லாமையே ஆகும். தன்னுயிர்க்கு அழிவு வந்தாலும் பிறிதோர் உயிர்க்கு அழிவு செய்யாமை தலைப்பட்ட அறமாம். கொல்லாமையைக் கொண்டவனே மெய்யான துறவிகளிலும் உயர்ந்தவன். கொலை, எவ்வகையால் என்ன காரணத்தால் செய்யப்பட்டாலும் கொலையேதான். பிறப்பொடு வந்த பசிக்கொலையைப், பகுத்துண்ணலால் மாற்றுவானுக்கு ஒப்பானவன் ஒருவனும் இல்லை என்கிறார்!

"வாலறிவன்" வடிவமைப்பில் மன்றல்விழா

(14-07-2013)

துணிப்பையில் மழைத்துளியின் வான்சிறப்பு



விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. குறள்:16

( மழைத்துளி வருகையே புல்நுனி உவகை )

## "வாலறிவன்" குறள் நெறிக்கழக நான்காமாண்டு நிறைவுவிழா 24.02.2013



ஓவியப்போட்டி-முதற்பரிசு-முதுவர்ப்பிரிவு

இர.ஆர்த்தி

---

பொன்மொழிப்போட்டி-முதற்பரிசு

ஒருநாள் நிச்சயம் விடியும்;- அது
திருக்குறளால் மட்டுமே முடியும்!

- பூ.தீபக்

## நிலையாமை :

நேற்றிருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமை உடையது உலகியல் வாழ்வு. நாள் என்பது நாள் அன்று; நம் உயிரைச் சிறிது சிறிதாக அரியும் வாள்! செல்வமும் கூட்டம் கூடிக் கலைவது போல் வந்து போய்விடுவதேயாம். உறக்கம் எவ்வாறு தானே வருமோ அதுபோல் வரும் பேருறக்கமே இறப்பாம்! ஆதலால், நிலையா வாழ்வு கொண்டே நிலைபெற்ற செயல்களைச் செய்துவிடல் வேண்டும்.

## அவாவறுத்தல் :

அவா என்பது அளவில் படாத ஆசை. வெள்ளமெனப் பெருக்கெடுப்பது. உலகமெல்லாம் கிடைத்தாலும் ஒரே விழுங்காக விழுங்கத்திறப்பது வாயை! அதனால் "ஆரா இயற்கை அவா" என்றார் வள்ளுவர். அதனை படிப்படியே ஒடுக்கவே நிலையாமை, துறவு, மெய்யுணர்தல் என்னும் ஒளிவிளக்குகளை அமைத்து, காரறிவால் உண்டாம் அவாவை அறவே தொலைத்து ஒடுக்குதற்குரிய வழிகளைத் திறந்து பேரா இயற்கை நிலையைக் காட்டினார் மெய்யுணர்வின் மேலோராம் திருவள்ளுவர். பேரா இயற்கையை ஒளிக்கதிர் ஆக்கி ஒரு செல்வம் தந்தார்! இன்னும் செல்வம் தானா எனவினவத் தோன்றும்! ஆம்! செல்வம் தான்! "வேண்டும் வேண்டும்" என்று குவிக்கும் **வழுச்செல்வமன்று!** "வேண்டா வேண்டா" என்னும் **விழுச்செல்வம்!** அச்செல்வமுற்றால் வேண்டுதல் வேண்டாமை இலாப் பேரொளிப் பிழம்பனாவான் எனத் துறவறப் பேற்றை விளங்கக் காட்டினார்! பேரா இயற்கைப் பேற்றைக் கூறி இருவேறு உலகத்து இயற்கையாம் **ஊழை வைத்து ஊழறிவு இல்லற வாழ்வர்**, இல்லறத் துறவுவாழ்வர்,

தனித்துறவு வாழ்வர், அரசாள்பவர் அனைவர்க்கும் வேண்டுமென அறத்துப்பால் பொருட்பால் நடுவே வைத்தார். இனிப்,

## "பொருட்பால் வள்ளுவர் காட்டும் குடும்பத்திற்கு வேண்டாவா?"

'அகநல ஆக்கம்' வேண்டுமெனில் 'புறநல ஆக்கம்' வேண்டாமல் தீருமா? மக்களாம் செல்வத்திற்குக் கல்விச் செல்வம், கேள்விச்செல்வம், அறிவுச் செல்வம், பண்புச் செல்வம், தொழிற்செல்வம், நட்புச் செல்வம், நாட்டுநலச் செல்வம் என்பவை எல்லாம் வேண்டாவா?

காலம் அறிதல், இடம் அறிதல், வலியறிதல், அவையறிதல் வேண்டாவா?

மதுவும் சூதும், சிற்றினம் சேர்தலும், சேராச்சேர்க்கை சேர்தலும் ஆகுமா?

தொழில், தொழில் திறம், தொழில் தூய்மை, தொழில் துணை என்பவை வேண்டும் அல்லவோ!

பிறந்த குடியைப் பெருமைப்படுத்தும் குடிசெயல்வகை--யையும், குடிமைச் சிறப்பையும் விட்டது குடும்பமாகுமா?

மானமும் பெருமையும் குடும்பப் பேறுகள் அல்லவோ!

பண்புடைமையையும் சான்றாண்மையும் போற்றாக்--குடும்பம் குடும்பமாகுமா? அப்படியானல் என்ன பொருள்?

**வள்ளுவம் வாழ்வியல் நூல்! வீட்டு வாழ்வுச் சிறப்பால் நாட்டு வாழ்வும் உலக வாழ்வும் நலம் பெறச் செய்யவே, செய்யப்பட்ட செம்பொருள் நூல்!** பிறப்பொப்பும், கல்வி ஒப்பும்,

தொழிலொப்பும், வாழ்வுரிமை ஒப்பும், வழிபாட்டு ஒப்பும் கொண்டு, உலகுக்கு ஒரு கதிரோன் எனத் தமிழ்மண்ணின் மணமாகத் திகழ்ந்த "**வாழ்வியல் நூல் திருக்குறள்**" ஆதலால், கொள்ளத்தக்கவை இவையெனக் கூறப்பட்டவற்றைக் கொண்டும், தள்ளத்தக்கவை இவையெனக் கூறப்பட்டவற்றைத் தள்ளியும் வாழும் குடும்பமே "**வள்ளுவர் காட்டும் குடும்பமாம்!**"

## வாழிய வள்ளுவம்!

## வாழிய நலனே! வாழிய நிலனே!



வள்ளுவம் நமது மறையாகும்;- நமக்கதுவே
வாழ்வியல் முறையாகும்! - மேத்தாவாணன்

## திருக்குறள் நூலைப் படிப்பதுன்வேலை!

- அன்புக்கு வணங்கு
  அறிந்தபின் இணங்கு!
  பண்புடன் விளங்கு
  பசித்தவர்க் கிரங்கு!

- பேதங்கள் தீர்த்து
  பெருமையை உயர்த்து!
  நீதியைக் காத்து
  நேர்மையைக் காட்டு!

- பொன்மொழிக் கேட்டு
  பொய்மையை மாற்று!
  பொறுப்புகள் ஏற்று
  பொதுப்பணி யாற்று!

- திருக்குறள் நூலை
  சிறந்த முப்பாலை
  கருத்துடன் காலை
  படிப்பதுன் வேலை!

– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

**"வாலறிவன்" குறள் நெறிக்கழக வெளியீடு**




வள்ளுவப் பரப்புதல் குடும்பம் குடும்பமாகப் பெருகி உலகாக விரிய வழிகாணல் வள்ளுவத் தோன்றல்களின் கடப்பாடாம். அதனை இனிது செய்யும் மேத்தாவாணர்க்கும் துணைநிற்பார்க்கும் பரப்புதலில் பங்கு கொள்வார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

இன்ப அன்புடன் **இரா.இளங்குமரன்**